


# நினைவலைகள்

பா.நித்தியானந்தன்

13.10.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் பாலசுந்தரம் நித்தியானந்தன்

அவர்களின்


சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

13.10.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



அன்பிற்கு ஆபரணமாய்
ஆதரவிற்கு உத்தமனாய்
இன்பத்தில் நல்லூற்றாய்
ஈகைக்கு இலக்கணமாய்
உறவிற்கு உரியவனாய் ஊரில் எமக்கு
வழிகாட்டியாய் எழிலின் பிறப்பிடமாய்
ஏற்றத்தின் நெறிகாட்டியாய் ஐயம் திரிபுற
அறிவூட்டி ஒழுக்கம் சிறக்க வழிகாட்டி
எம்மையெல்லாம் வாழவைத்த
அன்பு அப்பாவே . . . .
என்ன செய்வோம் யாம் நா தழுதழுக்க
கண்களில் நீர் சொரிய இதயம் துடிதுடிக்க
உங்கள் நினைவாக எமது பாசத்துளிகளை
பாவாக உங்கள் பாதக் கமலங்களில்
சமர்ப்பிக்கின்றோம்.



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# அமரர்

## திரு. பாலசுந்தரம் நித்தியானந்தன்

அவர்கள்

| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 28.05.1944 | 13.09.2005 |

### திதி வெண்பா

சீர் பார்த்திப ஆண்டு சேர் ஆவணித் திங்கள்
பூண்ட திதி அபரபக்க துதியையில் - பார்புகழும்
பாலசுந்தரம் நித்தியானந்தன் அமரபதம் நண்ணி
[illegible]டி சேர் நன்னாள்.

N.M.GRAPHICS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
# தோத்திரத் திரட்டு



திருச்சிற்றம்பலம்

## காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் மெயிற்றினை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

சிறையாரு மடக்கிளியே
யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவேன்
மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி
புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் றிருநாம
மெனக் கொருகாற் பேசாயே.

## திருவாசகம்

உடையாளுன்ற னடுவிருக்கு முடையானடுவுணீ யிருத்தி
யடியேனடுவுளிரு வீரு மிருப்பதனா லடியேனுன்
னடியார் நடுவுளிருக்கு மருளைப்புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலேயென் கருத்துமுடியும் வண்ணமுன்னின்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பக்தர்கள்! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து!
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி
பேதியாய் வேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்கும்தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

உம்பர் தருத்தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# பாலசுந்தரம் நித்தியானந்தன்

அவர்களின்

## வாழ்க்கைப் பதிவுகள்

இந்துசமுத்திரத்தின் நல்முத்தாய் விளங்குவது ஈழத்திரு நாடு ஈழத்திரு நாட்டின் சிகரமாகவும் எழில் ஓவியமாகவும் பிரகாசித்திருப்பது யாழ்ப்பாணம் இந்த யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தென்னையும், பனையும், மாவும், செந்நெற் கழனிகளும், கனிதரு வாழைகளும் பொலிந்து சிறந்து விளங்கும் படியாகத் தலை நிமிர்ந்து நிற்பது சங்கானை வடலியடைப்பு.

இந்த வடலியடைப்பில் சைவப்பெருமக்களின் உயர்குலத் தோன்றல்களான இறைபக்தி மிக்க கனகசபாவதி பாலசுந்தரம் அவர்தம் துணைவியார் பாலாம்பிகைக்கும் இரண்டாவது புத்திரராக 28.05.1944 ல் அவதரித்தார் அமரர் நித்தியானந்தன் ஆவார். இவரது உடன்பிறப்புக்களாக அக்கா பேரின்பநாயகிதேவியும் தம்பி சிவானந்தன் தங்கைமார் சர்வானந்ததேவி, கௌரி, சுந்தரகுமாரி ஆகியோர் அமைந்தனர்.

அமரர் நித்தியானந்தன் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் உயர்கல்வியை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலும் பயின்றார். 1958ம் ஆண்டு தனது தந்தையாரின் இழப்பைத் தொடர்ந்து சாந்தி அச்சகத்தில் தனது பணியை ஆரம்பித்தார்.

1985 ல் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்துரை அன்னலட்சுமி தம்பதிகளின் புத்திரியாகிய கமலாம்பிகையை (பபா) தனது வாழ்க்கைத் துணைவியாய் ஆக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். இவர்களது நல்லறம் மிகுந்த இல்லற வாழ்வின் பயனால் மிதிலன், வித்யா, டிலக்ஷி ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்று மகிழ்ந்தனர்.

1985 ம் ஆண்டின் பிற்பகுதியில் "முயற்சி திருவினை ஆக்கும்" எனும் முதுமொழி போலத் தனது தொழிலைச் சிறப்புற செய்து வந்த இவர் நித்தி அச்சகம் ஒன்றை நிறுவி சொந்தமாகக் தொழிலைச் செய்து வந்தார் பின்பு தனது அச்சகத்தை ஸ்ரீ சாயி அச்சகம் என்ற பெயரில் தாவடியில் நிறுவி நடாத்தி வந்தார்.

இவர் இறைபக்தி மிகுந்தவர் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவார். இவரின் அடக்கமான பேச்சினாலும் அமைதியான போக்கினாலும் எல்லோரும் இவரை விரும்புவார்கள். இவர் பூங்கன்றுகள் நாட்டிப் பூக்கள் மலர்வதைப் பார்த்து அகமகிழ்வார். பிள்ளைகளின் கல்விமீது மிகுந்த அக்கறை உள்ளவர்.

இவர் நல்ல குடும்பத்தலைவனாக, அன்புள்ள நல்ல தந்தையாக, பொறுப்புள்ள சகோதரனாக பண்புள்ள மனிதனாக வாழ்ந்தார். இவ்வாறு சிறப்பாக வாழ்ந்துவரும் வேளையிலே திடீரென நோய்வாய்ப்பட்டுத் தனது வாழ்வை 13.09.2005 அன்று பூர்த்தி செய்து எம் அன்புத் தெய்வம் எம்மைவிட்டுப் பிரிந்தது எமது பேரிழப்பாகும்.

அவரது ஆத்மா எல்லாம் வல்ல கற்புலத்து மனோன்மணி அம்பாளின் பாதாரவிந்தங்களை அடைந்து சாந்தி பெற வேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மா சாந்திப் பிரார்த்தனையுரை

அமரர் பாலசுந்தரம் நித்தியானந்தன் அவர்கள் யாழ் வடலியடைப்பை பிறப்பிடமாகவும் கொக்குவில் நந்தாவில் அம்பாள் கோவிலடியை வாழ்விடமாகவும் கொண்டு வாழ்ந்து வந்தவர் அன்னார் முகத்தில் புன்முறுவல் தவழ ஐயா என்று அன்பாக கூப்பிடும் சத்தம் இப்போதும் எனது காதில் கேட்டவண்ணம் உள்ளது. அவர்கள் சிலகாலம் சுகயீனமுற்று பின்னர் தேறி தனது கடமைக்குச் செல்ல வேண்டும் ஆசையாக இருந்தவர். மிகுந்த இறைபக்திஉடையவர் அன்னாரின் திடீர் மறைவினால் துயரடையும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அவர்தம் ஆத்மா அம்பிகையின் பதம் சென்றாறினார்.

இங்ஙனம்

**ச.ஸ்ரீசந்தனக்குருக்கள்**
சிவாச்சார்யசாது,
பிரதமகுரு,
நந்தாவில் அம்மன் தேவஸ்தானம்,
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மசாந்தி பிரார்த்தனை

அண்மையில் அமரர் ஆகிவிட்ட திரு. பாலசுந்தரம் நித்தியானந்தன் அவர்கள் வடலியடைப்பு என்ற கிராமத்தில் பிறந்தவர். அவர் சாந்தி அச்சகத்தில் பணிபுரிந்த காலத்திலிருந்தே நன்கு அறிவேன். எனது தம்பியார் விவேகானந்தனின் மனைவியின் தம்பியாகிய இவர் அடக்கம், பொறுமை, அன்பு முதலிய நல்ல பழக்கங்களை உடையவராவார். யாரையும் கடிந்து கொள்ளாதவர். அதுபோல யார் அவரை நோகடித்தாலும் புன்னகையுடன் அதனை ஜீரணிப்பார்.

திருமண பந்தங்களால் இணைக்கப்பட்ட அமரர் நித்தியானந்தன் அவர்கள் இறக்கும்வரை எனது ஒரு சகோதரர் போலவே நடந்துகொண்டார். என்னிடம் பல விடயங்களைக் கலந்து ஆலோசித்தே முடிவெடுப்பார். எனது சொல்லை அவர் மறுத்துரைத்ததை நான் காணவில்லை. சாந்தி அச்சகத்தில் பணிபுரிந்தபின் தாமாகவே சாயி அச்சகம் என்ற ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து முதலில் இணுவிலிலும், பின்பு தாவடியிலும் நடாத்தி வந்தார்.

இறைவனின் எண்ணத்தை யாரறிவார்? அவரை நோய் இறுகத் தழுவியது. நோய்வாய்ப்பட்டபொழுதிலும் அவர் தனது தொழிலகத்தை நடத்தியே வந்தார். ஆயினும் யாரும் எதிர்பாராவண்ணம் அவர் திடீரெனப் பிரிந்து விட்டார். எல்லாமே எப்பவோ முடிந்த காரியம் என எண்ணி ஆறுதலடைவோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சு.பொ.நடராசா**

அண்ணா தொழிலகம் - இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அப்பாவிற்கு

எங்கள் குலத்தின் ஒளி விளக்காய் விளங்கும் அப்பாவே! உங்கள் அன்பான பேச்சைக்கேட்டு நாட்கள் பலவாகிவிட்டன. அமுதமான குணம் காட்டும்பாசம் எங்கே! போய்விட்டது. பண்பான பார்வை எங்கே? பரிவுடன் அணைத்த கரங்கள் எங்கே போய்விட்டது. எந்த நாளும் உங்களை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றோம். நீங்கள் ஒன்றுமே எங்களிடம் பேசாமல் எங்கு சென்றுவிட்டீர்கள் அப்பா நீங்கள் எங்கள் கல்வியில் எவ்வளவு ஆர்வம் காட்டினீர்கள் பரீட்சைப் புள்ளிகளைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி அடைவீர்களே. உங்களின் ஆசைகளையெல்லாம் நாங்கள் கட்டாயம் பூர்த்தி செய்வோம் என்று இங்கு ஆணித்தரமாகக் கூறுகின்றோம்.

உங்கள் பிள்ளைகள்

**மிதிலன், வித்யா, டிலக்ஷி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அண்ணாவே!

நித்தியானந்தம் என்று
நற்பெயர் பெற்ற நீர் - எங்கள்
நித்திய வாழ்வில் முத்தாக ஒளிர்ந்தீர்
ஏழிரண்டு வயதில் தந்தையை இழந்ததும்
தோள் கொடுத்து எங்கள்
குடும்பச்சுமை ஏற்றீர்
அன்பினைச் சொரிவதில்
அன்னையாய் நின்றீர்
பண்புகள் சொல்வதில்
தந்தையாய் நின்றீர்
அறிவுரை செய்வதில்
ஆசானாய் நின்றீர்
கல்வியை இழந்து நீர் - நாம்
கல்வி பெற உழைத்தீர் - நல்ல
துணைகளைத் தேர்ந்தெடுத்து
திருமணம் செய்து வைத்து - நாம்
வளமுடன் வாழ்வதற்கு
வழி சமைத்து வைத்தீர்
இரக்கமற்ற காலன் உங்கள்
உயிர் பறித்துச் சென்றான்
பரிதவித்து நிற்கின்றோம் - உங்கள்
பாசமும் இழந்து
உங்கள் ஆத்மா சாந்திபெறவேண்டி
உள்ள வரை நாங்கள்
இறைவனடி தொழுவோம்
**சாந்தி ! சாந்தி ! சாந்தி !**

சகோதர, சகோதரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் மைத்துனரே!

அமைதியின் இருப்பிடமாய்த்

திகழ்ந்த எங்கள் மைத்துனரே! - எம்மை

அன்பு செய்யும் நண்பனாய் வாழ்ந்தவரே

துன்பம் வந்த வேளையெல்லாம் - நாங்கள்

சோர்ந்து மனம் நொந்திடாமல் - வாழவென்று

துயர் துடைக்கும் சோதரனாய் - நின்றீர்!

உங்கள் பிரிவால் - நாம்

உணர்விழந்து வாடுகின்றோம்

இனியமொழி பேசி எங்களை

அன்பு செய்த உங்கள் ஆத்மா

சாந்தி பெற நாங்கள்

என்றென்றும் பிரார்த்திப்போம்.

**மைத்துன, மைத்துனிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சகலகலாவல்லி மாலை



## காப்பு

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என்
உள்ளத்தினுள்ளே இருப்பள் இங்கு வாராது இடர்.

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
வுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற் கடலுந்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங்கொண்டு தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதம் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமுமவ தானமுங்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற்பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை



# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு
## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம்
துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும்
நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
கன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையிற் புதைத்த வஞ்சனை தன்னையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறந்த
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைகுற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன்நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருப்பள்ளி எழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 01

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 02

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந் தருளாயே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின் னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 04

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 05

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 06

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறுஅது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 07

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்?
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 08

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 09

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சக்தியை வியந்து – மாணிக்கவாசக சுவாமிகள்
திருப்பெருந்துறையில் அருளிய

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். 01

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்! நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குத்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். 02

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுங்கோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 04

மாலறியா நான்முகனுங் காணாமலை யினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 05

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழும்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலவே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையழித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடோலேகர் எம்பாவாய். 06

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொனோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன் னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 07

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆறுமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். 08

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய். 09

பாதளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப்பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூர்த்திகளும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்தபொங்கு
மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைப்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம் பாடிஅந்த மா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள்
பேரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாய்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்கண வன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருகுங்குழவி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்காரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல்லா வுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைமின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 01

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 02

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 04

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டடோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 05

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 06

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 07

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவன் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சேர்த்தெம்பி ரான் என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 08

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
பொய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னனன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பபொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 09

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடு ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக் கரும்பின் தெளியைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கோடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக் காலால் உதைத்தல்பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடி
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடி கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்கு
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

## கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணியம்மை பேரில் பாடிய

# திரு ஊஞ்சல்

### காப்பு

சீரேறு செம்பதும மலரில் ஏறும்
திருவேறு மார்பனுடன் அயனும் தேடும்
தாரேறு கொன்றைமலர் முடியி லேறச்
சங்கவெண் குழைதோடு பொலிந்தே யேற
ஏரேறு கொக்குவிற் கற்புலத்தில் மேவும்
எழிலேறு மனோன்மணிமேல் ஊஞ்சல் பாட
காரேறு மங்குசத்தி னோடு பாசம்
கரத்தேறு கணபதிதாள் கருத்துள் வைப்பாம்.

கொண்டல்வளர் கனகவரை விட்ட மாகக்
குலவுகுலா சலங்கள் மணிக்கால்களாக
பண்டைமறை யொரு நான்கும் கயிறதாகப்
பலபுவனக் கோடிகள் பொற் பலகையாக
அண்டர்நடு அமரர்கோன் பதியே நல்ல
அரிகொள்நவ ரத்தினமணி பீட மாக
மண்டல மெலாம்புகழ் கற்புலத்தில் மேவும்.
மாதுமையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல். 01

விண்ணுலவு மிருசுடர்கள் தீப மாக
விளங்குபல தாரகைகள் விதான மாக
தண்ணுலவு சந்தான முதலா வைந்து
தனமலர்கள் நறுமலர்ப்பூம் பந்த ராக
எண்ணுலவு மிளந்தென்றல் கவரி யாக
இலங்குபகி ரண்டமணி மஞ்ச மாக
அண்ணல்வளந் திகழ்தரு கற்புலத்தில் வாழும்
அம்மையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல். 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவெண் டாமரைமல ரிந்திரை சீர்வாணி
செகமுழுது நிழற்றுவெள்ளைக் கவிகை கொள்ள
துய்யபகீரதி தவளக் கவரி வீசத்
தோகை அயிராணி செம்பொற் படிகமேந்த
ஐயைபயி ரவிமுதலோர் அடைப்பை தாங்க
அஞ்சுகமும் குயில்கூவ மஞ்ஞை யாட
பெய்யுமுகில் வளர் சோலைக் கற்புலத்தின்
பெண்ணரசி மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல். 03

தகரமணங் கமழ்மணிபொன் மவுலி மின்ன
சசிக்கலைகள் மானுநெற்றி அணிகள் துன்ன
மகரவனி குண்டலத் தோடிகலி நீல
வரிக்கயல்கள் பாய்கழனி ஆம்பல் மேவ
நிகரில்லா மைந்தர்கள் நியப்பூ வார
நிரைவட முத்தரிய மிசைநிழல்கள் வீச
புகரில்மறை தேடுகின்ற கற்புலம் சேர்
பொற்பதிவாழ் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல். 04

தும்புரு நாரதர் முதலோர் கீதம்பாட
துய்ய உடுப்பசி முதலோர் நடனமாட
அம்பரமே லவர்பாரி சாத மேவு
மலர்மழை பொன்மழைபோல மகிழ்ந்து வீச
செம்பதுமக் கன்னியொடு நாவு மாதும்
திகழுமிரு கரத்தாலும் வடந்தொட்ட டாட்ட
அம்புவியில் வளம்மிகும் கற்புலதித்ல் வாழும்
அம்மையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல். 05

மந்திரமே முதலான ஆதி தேவர்
மன்றில் நடராசரன்பர் மனதில் வாச
சிந்தையு வந்தினி திருக்கும் வானுலாவும்
திங்கள் வேறேனத் திகழகிம்புருடர் ஒன்றைத்
தந்தனுடன் கந்தன்மடி மிசையே மேவ
சகலவுயிர்களுமே வாழ்க தரையோ ருய்யச்
செந்திருவாழ் கொக்குவிற் கற்புலத்தில் மேவும்
தேவிஉமா னோன்மணியே ஆடீர் ஊஞ்சல். 06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிராரு மணியணி குண்டலங்க ளாடக்
கனகபணி யணிவளைகொள் கவின்க ளாட
புதிதான கொன்றையணிக் குஞ்ச மாட
பொற்றருவின் மலர்மாலை பொலிந்தே யாட
மதிபோலு நுதலிலணி சுட்டி யாட
வசைமல ரடிணைகள் சிலம்பு மாட
அதிகவனக் கொக்குவிற் கற்புலத்தில் வாழும்
அம்மையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல். 07

பவர்முதலாம் உருத்திரர் பண்ணவர்கள் மூன்று
பத்துடனே முக்கோடி பதுமன் மாலோர்
இவர்களுடன் இந்திரனக் கினியோன் காலன்
இனியகூர் மாண்டனுடன் ஆட கேசன்
தவர்களுமா கமங்கள் சதுர்வேத மோத
சதகோடி சக்திகளும் பாங்கின் மேவ
அவனிபுகழ் கொக்குவிற் கற்புலத்தில் வாழும்
அபிராமி மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல். 08

உரகபதி நகரெட்டுங் கால்க ளாக
ஓங்குபுவி தவிசிருப்ப உம்பர் மேலா
விரவுமொரு விதானமா யுடுங்கள் பூவாய்
விதுவுடனே கதிர்களொளி யாடி யாக
பொருவிலகி லாண்ட நிறை மன்றமாக
பொருந்தி உயிர் பரந்தருளு மன்னர் மன்னன்
வரைமகளாம் கொக்குவிற் கற்புலத்தில் மேவும்
மாதுமையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல். 09

சங்கரர்தம் இருகருணை விழிகள் வாழி
சாரும்அருட் சிவகாமி வல்லி வாழி
பொங்குகடல் சூழ்வாயிற் புலவர் வாழி
பூசுரரும் கோவினமும் பொலிந்து வாழி
ஐங்கரரோ டருஞ்ஷேத்ர பாலர் வாழி
அரசர்கோண் முறை வாழி அமரர் வாழி
திங்கள்முகில் மும்மாரி பொழிந்து வாழி
செகம்புகழ் கொக்குவில் நகரம் சிறந்து வாழி. 10

மனோன்மணியம்மை ஊஞ்சல் முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப மங்களம்

பூரணி புராதனிக்கு ஜயமங்களம் - சுப
புவனேஸ்வரி யம்மைக்கு சுபமங்களம்
நாராயணியாம் நந்தினிக்கு ஜெயமங்களம் - சுப
நாகேஸ்வரித் தேவிக்கு சுபமங்களம்.

தாட்சாயணி யம்மைக்கு ஜெயமங்களம் - சுப
தாரணி உமாதேவிக்கு சுபமங்களம்
மோட்சமருள் மோகினிக்கு ஜயமங்களம் - சுப
மாலினி மனோன்மணிக்கு சுபமங்களம்.

பார்வதி பரஞ்சோதிக்கு ஜயமங்களம் - சுப
பரமேஸ்வரி அம்மைக்கு சுபமங்களம்
கார்குழற் கற்புலத் தாய்க்கு ஜெயமங்களம் - சுப
கருணாகரி யம்மைக்கு சுபமங்களம்.

திக்கு எட்டுப் பாலகர்க்கு ஜயமங்களம்
தீன தயாபரிக்கு சுபமங்களம்
கொக்குவில் கற்புலத் தாய்க்கு சுபமங்களம்
கோதை மனோன்மணி அம்மைக்கு சுபமங்களம்.

- *Friend in need is a friend indeed.*
  ஆபத்துக்கு உதவும் நண்பனே உண்மையான நண்பன்.

- *A jar's mouth may be stopped, a man's cannot.*
  உலை வாயை மூடினாலும் ஊரார் வாயை மூடமுடியாது.

- *As you sow so shall you reap.*
  வினை விதைத்தவன் வினை அறுப்பான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லின் அமைப்பு

மனிதனில் 32 நிரந்தரப் பற்களும் 20 பாற்பற்களும் உண்டு. பல்லானது மிளிரி, பன்முதல், பல்மச்சைக்குழி ஆகிய பகுதிகளாலானது. மிளிரி 96% அசேதனப் பதார்த்தங்களையும் 4% சேதனப் பதார்த்தங்களையும் கொண்டுள்ளது. பல்முதலானது 35% சேதனப் பதார்த்தம், நீர் ஆகியவற்றையும் 65% அசேதனப்பதார்த்தத்தையும் கொண்டுள்ளது. பற்குழியானது குருதி, மயிர்த்துளைக் குழாய் நரம்புகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

மனிதன் பற்களை இழப்பதற்குரிய முக்கிய காரணிகளில் பற்சூத்தையும் ஒன்றாகும்.

## பற்சூத்தை எவ்வாறு ஏற்படுகின்றது?




பல்லின் மேல் இருக்கும் உணவுச் சிதைவுகளில் உள்ள இனிப்புப் பதார்த்தம் மேலே குறிப்பிட்ட விளக்கப் படத்திலுள்ள நுண்ணங்கிகளின் நொதித்தல் தொழிற்பாட்டினால். இலக்ரிக் அமிலம் (Lactic acid) உருவாகி மிளிரி, பன்முதல் பகுதிகளிலுள்ள சேதன, அசேதனப் பதார்த்தங்களைக் கரைப்பதன் மூலம் பற்சிதைவு ஏற்பட்டு பற்குழி (Cavity) ஏற்படுகின்றது. பற்குழி பல்மச்சைக்குழி வரை செல்லும் போது பல்நரம்பு தூண்டப்பட்டுப் பல்வலி ஏற்படுகின்றது. இதைத் தொடர்ந்து பல்வீக்கம் ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பற்சூத்தையைத் தடுக்கும் வழிகள்

மேற்குறிப்பிட்ட விளக்கப் படத்திற் காட்டப்பட்டுள்ள 3 காரணிகளுள் ஒன்றை அகற்றுவதன் மூலம் பற்களைப் பற்சூத்தை உண்டாவதிலிருந்து தடுக்கலாம். 3 காரணிகளுள் அகற்றக்கூடிய ஒரேயொரு காரணி இனிப்பு உணவுப் பதார்த்தச் சிதைவுகள் ஆகும்.

இனிப்பு உணவுப் பதார்த்தச் சிதைவுகள் பற்களிற் படிவதைத் தடுக்கும் வழிவகைகள்

(I) காலை, மாலை இரண்டு வேளையும் பல் துலக்குதல்

(II) சாப்பாட்டுக்குப் பின்னர் வாய் கொப்பளித்தல்.

(III) இனிப்புப் பதார்த்தங்களை அடிக்கடி உட்கொள்ளுவதைத் தவிர்த்தல்

(IV) பல்மருத்துவரின் ஆலோசனையைப் பெறுதல்.

## சூத்தைப் பற்களுக்குரிய சிகிச்சை முறைகள்

1. தற்காலிகமாகப் பல் அடைத்தல்
2. நிரந்தரமாகப் பல் அடைத்தல்
3. பல்வேர் சிகிச்சை முறை

6 மாதங்களுக்கு ஒருமுறை பல்மருத்துவரை அணுகிப் பல் சூத்தைகளை இனம் கண்டு ஆழமான பற்சூத்தைகளைத் தற்காலிகமுறையில் அடைத்துப் பின்னர் நிரந்தர முறை மூலம் அடைக்க வேண்டும். ஆழமற்ற பற்சூத்தைகளை நேரடியாக நிரந்தர முறையில் அடைக்க வேண்டும்.

பற்சூத்தை மூலம் பல்வலி வந்த பற்களை வேர்சிகிச்சை முறை மூலம் பல்லைப் பிடுங்குவதிலிருந்து தவிர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாய்ப்புற்றுநோய் - சில தகவல்துளிகள்

*அறிமுகம் :*

*இலங்கையில் புற்றுநோயினால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. வாய் மற்றும் தொண்டைப் புற்றுநோயே அதிக அளவில், குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் ஏற்படுகின்றது. பெரும்பாலானோர் பிந்திய நிலையிலேயே சிகிச்சைக்காக வருகின்றனர்.*

*வாய்ப்புற்றுநோயானது இப்புற்றுநோயின் முன் நிலையில், அன்றில் ஆரம்ப நிலையில் இனம் காணப்பட்டால் அதற்கான குணம் அடையும் நோக்கிலான சிகிச்சையை வழங்க முடியும்.*

## வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணிகள்

*வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்குப் பல பாதகமான காரணிகள் கண்டறியப்பட்டுள்ளன. அநேகமாக இக்காரணிகளில் ஒன்றோ அல்லது பலவோ சேர்ந்து செயற்படுவதன் பிரதிபலனாக வாய்ப்புற்றுநோய் ஏற்படுகின்றது.*

## பாதகமான காரணிகள் :

*1. புகையிலை பாவித்தல் :*

*சிகரட், பீடி, சுருட்டு என்பன புகைப்பதனாலோ அல்லது புகையிலையை மென்று உண்பதினாலும் மூக்குப்பொடி பாவிப்பதனாலும் வாய்ப்புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது.*

*2. வெற்றிலை பாவித்தல் :*

*வெற்றிலையுடன் பாக்கு, சுண்ணாம்பு மற்றும் புகையிலையை சேர்த்து மென்று சாப்பிடுதல் வாய்ப்புற்று நோய் ஏற்பட ஏதுவாக உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **மதுபானம் அருந்துதல் :**

சாராயம், புளித்த கள், கசிப்பு என்பன உட்கொள்வதனால் அதன் எரிவுத் தாக்கத்தினால் வாய், மற்றும் தொண்டைப்புற்றுநோய் ஏற்படும்.

4. **வாய்ச் சுகாதாரமின்மை :**

வாய்ச் சுகாதாரம் இல்லாது இருத்தலும், அத்தோடு வாயில் கிருமித் தாக்கம் ஏற்பட்டாலும் (மேக நோய், அழுகிய வாய்) வாய்ப்புற்று நோயை ஏற்படுத்தும்.

5. **நீடித்த காலமான உராய்வு அல்லது உறுத்துதல்:**

பாதிப்படைந்த பற்கள், கூரிய பற்கள், அசாதாரணமாக வாய் மூடுதல், சூடான, உறைப்பான உணவு உட்கொள்ளல், மற்றும் நன்றாகப் பொருந்தாது இருக்கும். கட்டிய பற்களை அணிதல் என்பன வாய் உள்ளக மேலணியை தொடர்ந்து உறுத்துவதால் வாய்ப்புற்றுநோய் ஏற்படலாம்.

6. **சூரியனில் இருந்து வரும் பல கதிர்கள் மற்றும் ஓசோன் படலத்தில் உடைவால் பூமியை அடையும் பாதகமான சூரியக் கதிர்கள் :**

இது குறிப்பாக வெய்யிலில் வேலை செய்யும் விவசாயிகளில் உதட்டுப்புற்றுநோயை ஏற்படுத்தும்.

7. **சத்துள்ள உணவுப் பற்றாக்குறை :**

விற்றமின் ஏ அதிக அளவில் வாய் உள்ளக மேலணியைப் பாதுகாக்கும். விற்றமின் ஏ குறைபாட்டால் வாய்ப்புற்றுநோய் ஏற்பட உதவி செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*8. கவனிக்கப்படாதுள்ள வாய்ப்புற்றுநோய் முன்நிலை:*

*வாய் உள்ளகமேலணியில் அகற்றமுடியாத வெண்நிற அல்லது செந்நிற தழும்பு கவனிக்காது விடப்படுமிடத்து வாய்ப்புற்றுநோயாக மாற்றமடைய அதிக வாய்ப்புக்கள் உள்ளன.*

**வாய்ப்புற்று நோய்க்கான எச்சரிக்கை அறிகுறிகள்:**

* *வாய் உள்ளக மேலணி நாக்கு மற்றும் உதடு என்பவற்றில் மாறாது இருக்கும் புண்.*
* *சிவந்த அல்லது வெண்நிறமான அகற்றமுடியாத படலம் தெரிதல்.*
* *உணவு அரைத்தல் அல்லது விழுங்குவதில் கடினமாக இருத்தல்.*
* *வாயில் அல்லது கன்னத்தில் கட்டி அல்லது வீக்கம் ஏற்படல்.*
* *கதைப்பதில் கஷ்டமாக இருத்தல்.*
* *வாயில் இருந்து இரத்தம் வருதல்.*
* *வாய்ப் பகுதியில் உணர்ச்சி இன்மை ஏற்படல்.*

**வாய்ப்புற்றுநோய் தடுப்பு வழிகள் :**

* *மேற்கூறிய பாதகமான பழக்க வழக்கங்களைக் கைவிடல்*
* *வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை உண்ணா திருத்தல்.*
* *புகைப்பதைத் தவிர்த்தல்.*
* *மூக்குப்பொடி போடுவதைத் தவிர்த்தல்.*
* *வாய்ச் சுகாதாரத்தைப் பேணுதல்.*
* *மதுபானம் அருந்துவதைத் தவிர்த்தல்.*
* *வாய்ப்புற்றுநோய் முன்னிலை அல்லது மேற்கூறிய எச்சரிக்கைக் குறிகள் ஏற்படின் உடன் வைத்தியரை நாடவும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பல்லில் ஏதாவது மாற்றம் ஏற்படின் உடன் பல் வைத்தியரின் ஆலோசனையைப் பெறவும் பொருந்தாத கட்டிய பல்லை அணியாது இருத்தல்.
* பச்சை நிற இலை வகைகள் மற்றும், மஞ்சள் நிறப் பழவகைகளை நிறைய உட்கொள்ளல்.

மேற்கூறியவாறு பாதகமான காரணிகள் மற்றும் எச்சரிக்கை அறிகுறிகளை அறிவதன் மூலமும் நீங்கள் உங்கள் பழக்க வழக்கங்களை மாற்றி அப்பாதக காரணிகளைத் தவிர்ப்பதன் மூலமும் சந்தேகத்துக் கிடமான வாயில் ஏற்படும் மாற்றங்களை உடன் பல் வைத்தியரிடம் காட்டுவதனால் உங்களுக்கு வாய்ப் புற்றுநோய் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். அல்லது ஆரம்பநிலையில் கண்டறிய முடியும். இதனால் உங்களைக் குணமடையும் நோக்கிலான சிகிச்சையை வழங்க முடியும்.

## மாரடைப்பு என்றால் என்ன ?

இதயம் காபனீரொட்சைட்டு கலந்த அசுத்த இரத்தத்தை குருதிக்கலன்கள் மூலம் சேகரித்து நுரையீரலின் உதவி கொண்டு இரத்தத்தை சுத்திகரித்து ஒட்சிசன் கலந்த குருதியை உடல் முழுவதும் வினியோகிக்கின்றது. சிறுநீர்த்தொகுதியால் குருதியிலுள்ள கழிவுகள் அகற்றப்படுகின்றது.

இதயத்திற்கு தேவையான ஒட்சிசன் மற்றும் போசனப் பொருட்கள் கலந்த குருதியை முடியுரு நாடி தொகுதி இதயம் பெற்றுக் கொள்கின்றது. இந்த முடியுரு நாடி / நாளத்தொகுதியில் தடை ஏற்படும் போது தடை யேற்படும் பகுதி பாதிப்புக்குள்ளாகி அப்பகுதியிலுள்ள இதயத்தின் தசைகள் இறந்துவிடுகின்றன. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தின் தொழிற்படும் தசைத் தொகுதியின் அளவு குறைகின்றது. இதனால் இதயத்தின் வலு குறைகின்றது. இதனால் இதயம் தொழிற்படும் போது நெஞ்சுவலி ஏற்படுகின்றது. இதனை நாம் மாரடைப்பு என்று சொல்கின்றோம்.

## மாரடைப்புக்கு ஏதுவான காரணிகள்

1) உயர் குருதியமுக்கம்
2) குருதியின் மினக் கொழுப்பிளைவு
3) மிகுதியான மது அருந்துதல்
4) புகைத்தல்
5) நீரிழிவு நோய்
6) மிகையான மனநெருக்கீடு
7) பருமனான உடல்வாகு / உடல் உழைப்பற்ற தொழில்
8) முதுமை

## மாரடைப்புக்கான குணம் குறிகள்

1) மார்புவலியான மார்பின் மையப் பகுதியில் அழுத்துவது அல்லது அமுக்குவது அல்லது இறுக்குவது போன்ற நெஞ்சுவலி
2) வியர்த்துக் கொட்டுதல்
3) நெஞ்சுபடபடத்தல்
4) மயக்கம் தலைசுற்றுதல் உணர்விழத்தல் வாந்தி வருதல்
5) உடலை அசைக்கும் போது வலி கூடுதலாக ஏற்படும்.

உடனடியான மாரடைப்புக்கு சிகிச்சையளிக்கப்படல் வேண்டும் இல்லாவிட்டால் மரணம் ஏற்படும் சிகிச்சையின் முக்கிய நோக்கம் இதயத்தசையின் சிதைவை தருவது மட்டுப்படுத்தி மரணத்தை தடுத்தலாகும். உயர்வளி ஒட்சிசனை வழங்கி இதயத்தசை சிதைவுறுவதை கீழ்கண்ட வழிமுறைகளால் தவிர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) உடல் பருமனை குறைத்தல்
2) புகைத்தலை தவிர்த்தல்
3) மதுவினை தவிர்த்தல்
4) மாரடைப்புக்கு ஏதுவாக அமைந்திருக்கும் நோய்களை கட்டுப்படுத்துதல் (குருதி அமுக்கம், நீரிழிவு, குருதியில் மிகைகொழுப்பு)
5) மனநெருக்கீடுகளை தவிர்த்தல்

மாரடைப்புக்கு ஏதுவான நோய்களாகிய உயர் குருதியமுக்கம், குருதியில் மிகையான கொழுப்பு நீரிழிவு போன்றவற்றை கட்டுப்படுத்தி மாரடைப்பை கட்டுப்படுத்தலாம். புகையிலை மது அருந்துவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். பருமனை உடல்லாக உடையாக அதனைக் குறைத்துக் கொண்டு மன அழுத்தங்களை தவிர்த்து மாரடைப்பிலிருந்து நம்மை காத்துக்கொள்ளளாம்.

## நோய்களும் மருத்துவமும்

**இரத்தக் கொதிப்பு**

காலை, மாலை 4 பூண்டு வறுத்துச் சாப்பிட வேண்டும். கூடுமானவரை ஓய்வு, அமைதியான சூழல் வேண்டும்.

**இரத்தம் சுத்திகரிக்க**

அன்னாசிப்பழச்சாறு பருகுதல், புளிச்சல் கீரை, தக்காளிப்பழம், வேப்பம்பூ, இலை என்பவற்றை உணவில் சேர்க்க வேண்டும்.

**உடல் பருமன் குறைய**

கலியாண முருங்கை இலைச்சாறு 350 கிராம் கற்கண்டுடன் சேர்த்துப் பதமாகக் காய்ச்சிவைத்துத் தினமும் காலை, மாலை 1 அவுன்ஸ் குடித்துவர பருமன் குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன், எலுமிச்சைச் சாறுடன் சேர்த்து வெந்நீரில் கலந்து தினமும் சாப்பிடலாம். பூடுச்சாற்றுடன் நீர்கலந்து 1 வாரம் சாப்பிட்டாலும் பருமன் குறையும். சாப்பாட்டிற்கு முன் நாக்குப் பொறுக்கும் சூட்டில் சுடுநீரை விழுங்கிக் குடிக்க வேண்டும்.

**கண்ணில் தூசி விழுந்தால்**

கண்ணைக் கசக்காமல் ஒரு துறி வெண்ணெய் எடுத்துக் கண்மீது வைத்துக் கட்டினால் தூசி வெளியேறி கண் பிரகாசமடையும்.

**கண்பார்வை கூர்மைபெற**

பாகல் இலையை அரைத்துப் படுக்கும்போது கண்ணைச் சுற்றிப் பத்துப்போட்டால் கண் கூர்மை பெறும். மாலைக்கண் நோய் தீரும். வல்லாரையை அரைத்துப் பாலில் கலந்து காலை, மாலை 9 நாட்கள் சாப்பிட்டால் கண் கூர்மைபெறும்.

**குழந்தை எதையாவது விழுங்கிவிட்டால்**

சர்க்கரைவள்ளிக் கிழங்கை அல்லது முட்டைக் கோவாலை வேகவைத்துச் சாப்பிடக் கொடுத்தால் விழுங்கிய பொருள் மலத்துடன் வெளியேறும்.

**கூந்தல் வளர**

100 சிதம்பரத்தம்பூவை எண்ணெயில் போட்டு சுண்டக் காய்ச்சி தினமும் தலைக்குத் தடவ கூந்தல் நன்கு வளரும். வெங்காயச்சாற்றைத் தலையில் பூசிக் குளித்தால் சொடுகு, சிரங்கு தீரும். தாமரைப்பூவைத் தண்ணீருடன் கலந்து சுண்டக்காய்ச்சி காலை, மாலை வடிகட்டி 2 வாரம் சாப்பிட இளநரை மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுநீரக கற்கள் கரைய**

ஓமத்தைக் கசாயம் செய்து பாலில் கலந்து சாப்பிட்டால் சில நாட்களில் கல் கரையும்.

**பல் வெண்மையாக**

எலுமிச்சம்பழச்சாற்றை உப்பில் கலந்து நன்றாகப் பல்தேய்க்க வெண்மையாகும். வெங்காயச் சாற்றைப் பல்லில் தேய்க்கப் பல் பிரகாசமடையும்.

**முகப்பரு நீங்க**

கருச்சீரகத் தூளை எருமைப்பாலுடன் கலந்து பருக்களின் மீது பூச பரு மறையும். சாதிக்காயை அரைத்து தினமும் பூச பரு மறையும். புளிப்பில்லாத தயிருடன் மஞ்சள்தூள் கலந்து பருவின் மீது தடவிவர முகம் பிரகாசம் அடைந்து வெண்மையும் மென்மையும் பளபளப்பும் உண்டாகும்.

- *Too much of anything is good for nothing.*
  அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
- *Look before you leap.*
  ஆழமறியாமல் காலை விடாதே.
- *Coming events cast their shadow before.*
  கேடு வரும் முன்னே, மதிகெட்டு வரும் பின்னே.
- *Art is long and life is short.*
  கல்வி கரையில, கற்பவர் நாள் சில.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தித்திக்கும் தேனின் மருத்துவ குணங்கள்.

தேன் ஒரு சிறந்த ஆரோக்கிய உணவாகும். பாலை விட தேன் ஆறு மடங்கு அதிகம் சத்துள்ள உணவாகும். தேனுக்குப் பல நோய்களைக் குணமாக்கும் சக்தி உண்டு. சுவாசம் சம்பந்தமான நோய்கள், பித்தம், வாதம், இரத்த நோய்கள், வயிற்றுக் கிருமிகள், கண்நோய்கள், மூலநோய், கபம், சேர்க்கை நோய், வயிற்றுக் கோளாறு, மூட்டுப்பிடிப்பு, தொழுநோய் இவற்றைக் குணமாற்கும் மருத்துவ சக்தி உண்டு. அது மட்டுமன்றி தேனுக்கு நோய்க் கிருமிகளைக் கொல்லும் சக்தி உண்டு.

★ நாள் தோறும் தேன் சாப்பிட்டு வந்தால் நரம்புத் தளர்ச்சி மறையும். குரல் வளமாகும். ஆயுள் அதிகரிக்கும்.

★ தூங்கச் செல்லும்முன் சூடான பாலில் சிறிது தேனைச் சாப்பிட்டு வந்தால் ஞாபகசக்தி அதிகமாகும், இதயமும் பலமடையும்.

★ தினமும் அதிகாலையில் வெறும் வயிற்றில் இளம் சூடான நீரில் தேன் கலந்து சாப்பிட்டால் உடல் பருதன் குறையும். உற்சாகம் பிறக்கும். அதுமட்டுமன்றி வயிற்று வலியும் குணமாகும்.

★ தினமும் அதிகாலையில் வெறும் வயிற்றில் குளிர்ந்த நீரில் தேன் கலந்து சாப்பிட்டால் உடல் பருமனடையும்.

★ தேனில் பலாப்பழச் சுளையை நனைத்துச் சாப்பிட்டால் சுக்குவான் இருமல் நீங்கும்.

★ எலுமிச்சம்பழச் சாற்றில் சிறிது தேன் கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் ஊறியபின் கழுவினால் முகச் சுருக்கம் மறையும்.

★ பெண்கள் சுத்தமான தேனை கண் புருவத்தில் தீட்டினால் புருவம் அடர்த்தியாகவும் மென்மையாகவும் வளரும்.

★ பெண்கள் தேனுடன் இஞ்சிச் சாற்றை கலந்து குடித்தால் பித்த நரை இல்லாமல் போகும். ஊளைச்சதை குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ தேனையும், வெங்காயச் சாற்றையும் சமஅளவு கலந்து கண் வலி வரும்போது ஒரு சொட்டு விட்டால் கண்வலி நீங்கும். கண் தளர்ச்சி குறையும்.

★ சாப்பிடுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பு இரண்டு கரண்டி தேன் சாப்பிட்டால் நெஞ்சு எரிச்சல், வயிற்றுக் காந்தல், அல்சர் போன்ற நோயின் தாக்கம் குறையும்.

★ தண்ணீரில் தேன் கலந்து சாப்பிட்டடால் நன்கு தூக்கம் வரும்.

★ வல்லாரையைத் தூள்செய்து ஒரு கரண்டி தூளோடு இரண்டு கரண்டி தேனை ஊற்றி குழைத்து காலை உணவை முடித்து முப்பது நிமிடத்துக்குப் பின்பு உட்கொள்ள மெலிந்த உடல் குண்டாகும். இது உண்ணும் போது தயிர், இளநீர் மற்றும் குளிந்த பானங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

★ பாலையும் தேனையும் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் குழந்தைகள் நன்கு வளரும். நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகும்.

★ அன்னாசிப் பழத்தோடு தேனைச் சேர்த்து பகல் சாப்பாட்டிற்கு மேல் சாப்பிட்டால் உடல் பலம் பெறும். தேகத்தில் ஒருவித பொலிவு உண்டாகும்.

★ மாதுளம்பழச் சாற்றோடு தேன் கலந்து காலை உணவுக்கு மேல் சாப்பிட மலச்சிக்கல் நீங்கும். புதிய இரத்தம் உற்பத்தி ஆகும்.

★ தோடம்பழச் சாற்றையும் தேனையும் கலந்து தூங்கச் செல்வதற்கு அரை மணி நேரத்துக்கு முன் சாப்பிட எளிதாகத் தூக்கம் வரும்.

குறிப்பு: என்ன? ஆச்சரியமாக இருக்கிறதா? தேனில் இவ்வளவு மருத்துவ குணங்கள் உண்டு என்பது இப்போது உங்களுக்குத் தெரிந்துவிட்டால் இனி தினமும் தேனைப் பாவித்துப் பயனடையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

பாலசுந்தரம் + பாலாம்பிகை

↓

பேரின்பதேவி + விவேகானந்தன் (அமரர்)

நித்தியானந்தன் (அமரர்)

சர்வானந்ததேவி (ரஜனி) + நடேசபிள்ளை

சிவானந்தன் + சாரதாதேவி (ராதா)

கௌரி + குருபாததாசர்

சுந்தரகுமாரி + கார்த்திகைக்குமரன்

சின்னத்துரை + அன்னலட்சுமி

↓

ஜெயராணி + பூபாலசிங்கம்

விமலாதேவி + கணேசரட்ணம்

ஜெயபாலசிங்கம் + பாலாம்பிகை

மகேந்திரன் + சாரதாதேவி (அமரர்)

பேபிசறோஜா + சிவலிங்கம்

கமலாம்பிகை

ஜெயக்குமார் + விஜயகுமாரி

ஸ்ரீநேசா + சுகந்தி

லோகேஸ்வரி + கிரிதரகோபாலன்


ஜெயராஜ் + ரேவதி

ஜெயமாலா + பஞ்சலிங்கம்

மிதிலன் | வித்யா | டிலக்ஷி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



பாசத் தெய்வமாம் எங்கள் தந்தையாரின்
மரணச் செய்தி கேட்டு உடன்ஓடிவந்து
உதவியோருக்கும் மரணச் சடங்கிலும் கிரியைகளிலும்
கலந்து எமது துன்பத்தில் பங்கு கொண்டு ஆறுதல்
கூறியோருக்கும் நின்று நடாத்தியோருக்கும் மலர்வளையம்
சாத்தியோருக்கும் பூமாலை அணிவித்தோருக்கும்
கண்ணீரஞ்சலி வெளியிட்டோருக்கும் தொலைபேசி
அஞ்சல் மூலம் எம் துயரில் கலந்து கொண்ட
அனைவருக்கும் நன்றியை காணிக்கையாக்குகின்றோம்.
நாள்கள் பல சென்ற பின்பு நலமுடன் அந்தியேட்டியில்
கலந்து கொள்ள இன்றிந்த திதிக்கும் வந்தோருக்கும்
மகத்துவத்துடன் மதிய போசனத்திலும் கலந்து
கொண்டோருக்கும் மற்றும் எல்லோருக்கும் எங்கள்
மனப்பூர்வமான நன்றிகள்


**செருக்கப்புலம் வீதி,**
**நந்தாவின் அம்மன் கோவிலடி,**
**கோண்டாவில்.**

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

Sri Saji Offset Printers - Thavady. Tel: 021 - 2223527

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org